ராணி
காமிக்ஸ்
முகமூடி வீரர் மாயாவி தோன்றும்
மண்டை ஓட்டு
மாளிகை
ரூ 2

ராணி காமிக்ஸ்-148
(மாதம் இருமுறை இதழ்)

ஆகஸ்டு 16-31
1990

அமெரிக்காவில் கடற்கரையை ஒட்டியிருந்த ஒரு காடு, நகரமாக வளர்ச்சி அடைந்தது.
சிங்கம் உலாவிய இடம் கால்பந்து திடல் ஆயிற்று.
ஆனால், மலையருகே இருந்தகாட்டுக்குள் ஒன்று மட்டும் மாறவில்லை!
கடலில் புதைந்த செல்வத்தைத் தேடி எவ்வளவோ பேர் போயிருக்கிறார்கள்!
சாலமன் மன்னன் செல்வத்துக்குத்தான் எத்தனை வேட்டை

கடல் கொள்ளைக்காரர் புதைத்து வைத்த செல்வங்களையும் சிலர் தேடிக் கண்டுபிடித்தார்கள்
காட்டுக்குள் இந்த மண்டை ஓட்டு மாளிகைக்குள்ளும் பெரும் புதையல் இருப்பதாகச் செய்தி உலாவியது.
முகமூடி வீரர் மாயாவி அந்தப் புதையலைக் காத்து வந்தார். ஒருநாள் ஒருவர் வந்தார்.
நீங்கள் பாதுகாக்கும் புதையலை நான் பார்க்கலாமா?
ஓ! தாராளமாக!!
பார்த்ததும் அவர் மலைத்துப் போனார்!
அடேயப்பா! ஈடுஇணையற்ற புதையல்!
அது என்ன புதையல்?

ஏய் ஜேம்ஸ்! எங்கே கிளம்பி விட்டாய்?
தொழிலுக் குத்தான் பேபி!
NO CREDIT
ஏய்! வாடகையைக் கொடு. அல்லது உடனே வீட்டைக் காலிபண்ணு!
கவலைப்படாதே. அம்மணி! நான் இலட்சாதிபதியாகத் திரும்பி வருவேன்!
என் கையில் இருப்பது ஐம்பது காசுதான். அதிருஷ்டம் அடித்தால், நான் இலட்சாதிபதி!
ஒரு புதையல் வேட்டைக்காரர் வீடு.
இங்கேதான் கிளியோ பாட்ராவின் புதையல் இருக்கிறதா?
ஆமாம்! சகரா பாலைவனத்தில் புதைந்து கிடக்கிறது.

உனக்கு பத்து இலட்சம் வேண்டுமா, தளபதி ஆண்டரு?
இதுவே ரொம்பக் குறைவு!
தாத்தா!
அவர்தான்
ஆண்டரு
தாத்தா
இது ஒரு
பைத்தியம்
இப்படி ஏமாற்றுவதே அவனுக்கு வேலையாகி விட்டது!!
வருகிறாயா, மாமியார் வீட்டுக்கு?
மாட்டிக் கிட்டேனா!
திரும்பிப் போ! இல்லாவிட்டால், கப்பலை மூழ்கடித்து விடுவோம்!
போலீஸ் நிலையம்.
எங்கள் பிடியில் இருந்து நீ தப்ப முடியாது!
ஜேம்ஸ்! இப்பொழுது என்ன செய்து மாட்டிக் கொண்டாய்?
வழக்கம் போலத் தான் நீ என்ன செய்தாய் பீட்டர்?

கிளியோபாட்ரா புதையல் மேப் ஒன்றை விற்க முயற்சி செய்தேன்!
ஏதாவது புது முயற்சி செய்யக் கூடாதா?
மண்டை ஓட்டு மாளிகையில் அதிசயப் புதையல் இருக்கிறது!
அது இருக்கும் இடம் எனக்கு மட்டுமே தெரியும்!
ஜேம்ஸ், பீட்டர் இருவரும் சிறையில் அடைக்கப் பட்டார்கள்.
கிளியோபாட்ரா புதையல் இனி விற்காது. வேறு புதையல் பார்க்க வேண்டியதுதான்!
துப்பாக்கி கடத்தல் பயன் இல்லை! பீரங்கி கடத்த வேண்டியதுதான்.
உங்களுக்குப் புதையல்தானே வேண்டும்? மண்டை ஓட்டு மாளிகைக்கு வாருங்கள்!

மண்டை ஓட்டு மாளிகை! பேய் மாளிகை போலத் தெரிகிறது. அங்கே புதையலா?
ஆமாம்! அதிசயப் புதையல்!!
எங்கே இருக்கிறது?

நாட்டைத் தாண்டி காட்டுக்குள் போக வேண்டும்.

சாதாரணமாகப் போக முடியாது! நர மாமிசம் தின்பவர்கள் அங்கே இருக்கிறார்கள்!! அவர்கள் கையில் அகப்பட்டால், எலும்பு கூட மிஞ்சாது.

அந்தப் புதையலுக்கு முகமூடி வீரர் மாயாவி காவல்!
அவர் பேய் போல் அந்தக் காட்டுக்குள் உலாவிக் கொண்டிருக்கிறார்! அதிசயப் புதையலை எடுக்க எத்தனையோ பேர் முயற்சி செய்தார்கள். ஆனால், ஒருவர்கூட உயிருடன் திரும்பவில்லை.
பீட்டர்! உனக்குப் பயன்படுமா?
கன்னித் தீவு கதை போல இருக்கிறது! யார் நம்புவார்?
நான் சொல்லுவது உண்மை! முகமூடி வீரர் மாயாவியை என் கண்ணால் பார்த்திருக்கிறேன்!!

நீ மாயாவியைப் பார்த்தாயாக்கும்? சும்மா ரீல் விடாதே!
நான் பொய் சொல்கிறேனா?
ஏய்! என்ன இது. பேசிக்கொண்டு இருக்கும்போதே...
நான் மாயாவியைப் பார்த்திருக்கிறேன்! மண்டை ஓட்டு மாளிகையைக்கூட பார்த்திருக்கிறேன்!
புதையலைப் பார்த்தாயா?
என் மாமாதான். அந்தக் காட்டுக்குத் தலைவர். அவர்கூடச் சொன்னார்.

ஒருநாள் புதையலைப் பார்க்க அவர் போனாராம்.
நீங்கள் புதையலைப் பார்க்க வேண்டுமா?
ஆமாம். அதற்குத்தான் வந்திருக்கிறேன்.
ஆனால், மண்டை ஓட்டு மாளிகைக்குள் தான் யாரையும் அனுமதிப்பது கிடையாது!

எல்லாம் கட்டுக்கதை!
இருந்தால் காட்டுவானே!
ஆக, உன் மாமாவும்
புதையல்கள் என்று ஒரு புத்தகம் இருக்கிறது. அதில் பார்க்கிறேன்.
புதையல்கள்.
மண்டை ஓட்டு மாளிகை புதையலில் விலை மதிப்பில்லா அதிசயப் பொருட்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.
புதையல்கள்.
பீட்டர்! கொடு. பார்ப்போம்!!
ஏய், கிழித்துவிடாதே! என் தொழிலுக்கு வேண்டும்!!

மண்டை ஓட்டு மாளிகைப் புதையல் இருக்கத்தான் செய்கிறது போலிருக்கிறது!
LOST TREASURES of the WORLD
நான் சொன்னேன் அல்லவா? அதிசயப் புதையல் இருக்கிறது!
வயிரக் கிரீடம்... தங்கச் செங்கோல்... மாணிக்க மாலை... பெரிய புதையல்தான்!
நான் வெளியே போனதும் புதையல் வேட்டைக்காரர் களுக்கு இந்த செய்தியை விற்பேன்.
மடத்தனமாகப் பேசாதே! நாமே அந்தப் புதையலை எடுத்தால் என்ன?
அது இருக்கும் இடம் உனக்குத் தெரியுமா?
தெரியுமே!
ஆனால், அங்கே போகமுடியுமா?

பயங்கரக் காடு! நர மாமிசம் தின்பவர்கள்! முகமூடி வீரர் மாயாவி வேறு அங்கும்! போகவே முடியாது!
முடியாது என்று எதுவும் இல்லை!
சிறையில் இருந்து நாம் வெளியே போகவே பல ஆண்டு ஆகுமே!
நம்மை நீதி மன்றத்துக்குக் கொண்டு போவார்கள் அல்லவா?
போகும் வழியில் தப்பி ஓடி விடலாம்!
?
ஏய்! மூன்று பேரும் வெளியே வாருங்கள்.
போலீஸ்...
சீக்கிரம், உம்... ஏறுங்கள்!
எப்படித் தப்பிப்பது?
அதற்கு வழி இருக்கிறது!

இவர்கள் மூவரையும் விசாரணைக்கு அழைத்துப் போகிறோம்!
ஜேம்ஸ்! உன் திட்டத்தைச் சொல்லேன்.
உஷ்....!
நான் ஏற்கனவே எல்லா ஏற்பாடும் செய்து விட்டேன்!
அதோ அவர்கள் வருகிறார்கள்!
வழியை மறித்துக் கொண்டு ஒரு கார் நிற்கிறதே!
போலீஸ்

ஏய்! ஏன் இப்படி வழியை மறித்துக் கொண்டு நிற்கிறாய்? வா, கோர்ட்டுக்கு!
கையைத் தூக்கு!
துப்பாக்கியைக் கீழே போடு!
சீக்கிரம் கீழே இறங்குங்கள்!
சரியான நேரத்தில் வந்து விட்டாய்!
போலீசார் நம்மை விரட்டிக்கொண்டு வரக்கூடாது!
டுமீல்...!
தப்பி விட்டார் களே!
போலீஸ்
வேகமாகப் போ!

கைதிகள் தப்பி ஓடி விட்டார்கள்! போலீஸ் வேனுக்கும் தீ வைத்து விட்டார்கள்!
யார் அவர்கள்? எந்தப் பக்கம் போனார்கள்?
போலீஸ்!
இதோ இந்தப் பக்கத்தான் போனார் கள்!
ஜேம்ஸ்! இவர்கள் யார்?
ஒரு தளபதி, பீட்டர். துப்பாக்கி கடத்தலில் அவர் ஒரு மன்னன்! அவரைத்தான் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறோம்.

நான்தான் அவருக்கு துப்பாக்கி சப்ளை செய்கிறேன்!
வா ஜேம்ஸ்! இவர்கள் யார்?
என் சிறை நண்பர்கள் பீட்டர், பாவா. உங்களுக்கு அறிமுகப்படுத்த இவர்களை அழைத்து வந்தேன்.
ஜேம்ஸ்! நீ இந்த ஊரை விட்டே ஓடிவிடு. மற்றதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.
இல்லை, கேப்டன். நான் ஒரு நல்ல திட்டம் வைத்திருக்கிறேன்.
ஒரு பெரிய புதையல்! நீங்கள் உதவி செய்தால், நாங்கள் போய் எடுத்து வருகிறோம்!
புதையலா...

இந்தப் புத்தகத்தைப் பாருங்கள். எல்லா விவரமும் இருக்கிறது.
!
அவர்கள் நம்பிக்கையான ஆட்கள் தானா?
காட்டுக்குள் போக அந்தக் காட்டுவாசி வேண்டும். பீட்டர் உதவிக்கு வேண்டும். வேலை முடிந்ததும், இருவர் கணக்கையும் முடித்து விடலாம்!
மூன்று கைதிகள் தப்பி ஓட்டம்! நீதிமன்றம் போகும் வழியில்.
3 WERE ON WAY TO COURT
GUN-RUNNER, CON MAN, THIEF
அவர்களை எப்படி விட்டீர்கள்? சுட்டுக் கொன்று இருக்கலாமே!
ஆணையர்
எங்கள் துப்பாக்கிகளைப் பறித்துக்கொண்டு விட்டார்கள்!

ஒருவன் துப்பாக்கி கடத்துகிறவன். ஒருவன் மோசடிக்காரன். ஒருவன் திருடன். விடக் கூடாது. தேடிப் பிடியுங்கள்!
பயங்கரக் காடு! நர மாமிசம் தின்னும் காட்டு வாசிகள்! எப்படிப் போவது, ஜேம்ஸ்?
அதை நான் பார்த்துக் கொள்ளு கிறேன், கேப்டன்
அவர்களிடம் விஷ அம்பு. நம்மிடம் விஷ வாயு. அவர்களை வெல்ல இது போதும்.
நச்சு வாயு.
அபாயம்
நான் போய் எல்லா ஏற்பாடும் செய்துவிடுகிறேன். நீங்கள் ஹெலிகாப்டரில் வந்துவிடுங்கள்.
புதையலை எடுத்துக் கொள்வோம்.

முயற்சி செய்து பார்ப்போம். புதையல் கிடைத்தால், கோடிக் கணக்கில் தேறுமே!
பீட்டர்... பாவா... வாருங்கள்!
ஜேம்ஸ்சையும் காட்டுக்குள் தீர்த்துவிட வேண்டும்!
ஹெலிகாப்டர் வருமுன் நானே புதையலை எடுத்து விடுவேன்!
இந்தப் பயல்களை காட்டுக்குள் தீர்த்துவிட வேண்டும்!
புதையல் முழுக்க எனக்குத் தான்!
அதேநேரம்— காட்டுக்குள்...
உங்கள் காவலை மீறி இங்கே யார் வரமுடியும்?
குரான்! எல்லாம் சரியாக இருக்கிறதா?
அப்படி மெத்தனமாக இருந்துவிடாதே! எத்தனையோ புதையல் வேட்டைக்காரர்கள் குறி வைத்திருப்பார்கள்!

மூவரையும் போலீசார் தேடினார்கள்.
போலீஸ்
STOP
எல்லா சாலை களிலும் சோதனை சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளன.
கேப்டன்! நான் ஊரைவிட்டே வெளியில் போக முடியாது.
காரில்தானே? நம்மிடம் கெலிகாப்டர் இருக்கிறதே!
கேப்டனும் கெலிகாப் டரில் ஏறிக்கொண்டார்.
காட்டுக்குள் வெகுதூரம் போக வேண்டும், கேப்டன்.
இங்கே இறங்கலாம் கேப்டன். இதுதான் பாதுகாப்பான இடம்.

இது ஓர் எரிமலை! இந்தப் பக்கம் யாருமே வரமாட்டார்கள்.
நாம் இங்கேயே இருப்போம். பாவா போய் ஒரு கழுதை கொண்டுவரட்டும்!
இந்தக் காட்டுக்குள் சாதாரணமாக யாருமே வரமுடியாது.
கழுதை எதற்கு?
விஷ வாயு பாட்டில்களை கொண்டு போகத்தான்
நீங்கள் இங்கேயே இருங்கள். நானும் பாவாவும் காட்டுக்குள் போகி றோம்.

மண்டை ஓட்டு மாளிகையை அடைய ஒரு வாரம் ஆகுமாம். நான் காட்டுத் தீயை மூட்டி விடுகிறேன். நீங்கள் வந்துவிடுங்கள்.
நாங்கள் வருகிறோம்!
புதையலுடன் வாருங்கள்!
எரிமலையில் வந்து முகா மிடுகிறோமே?
இது அணைந்த எரிமலை. ஆனாலும், இதன் பக்கம் யாரும் வருவதில்லை என்று பாவா சொன்னான்.

நீங்கள் ஆட்சியைக் கவிழ்த்து, அரசாங்கத்தைப் பிடிக்கப் போகிறீர்களாமே?
புதையல் கிடைத்ததும், பாருங்களேன்!
மண்டை ஓட்டு மாளிகைக்கு தனது டைகர் நாயை முகமூடிவீரர் காவலுக்கு வைத்திருந்தார்.
பீட்டர்! இந்தப் புதையலில் எவ்வளவு கிடைக்கும்?
நிச்சயம் நூறு கோடி கிடைக்கும்!
நூறு கோடி கிடைத்தால்...

பாவா! புதையல் எவ்வளவு தேறும்?
விலைமதிப்பே இல்லை என்கிறார்கள்!
நூறு கோடி....
நூறு கோடி....
அருவி விழும் ஓசை கேட்கிறதே. நாம் மலை அடிவாரத்தை நெருங்கி விட்டோம், என்று நினைக்கிறேன்!

இன்னும் ஐந்தே நாள்தான்..., புதையல் நம் கைக்கு வந்துவிடும்!
சரி, விளையாடுங்கள்!
காட்டுவாசிகளை சமாளிக்க விஷவாயு மட்டும் போதுமா?
இப்போது அது பற்றி யோசித்துப் பயன் இல்லை!
ஆனால், அவர்கள் அத்தனை பேரையும் கொல்ல விஷ வாயுவே போதும்.
மாயாவி ரொம்பக் கொடியவனா?
இல்லை இல்லை! அன்பு நிறைந்தவன். யாருக்கும் ஓடிவந்து உதவி செய்வான்.
விஷ வாயு

ஆமாம். இங்கே எப்படி வந்தாய்?
நான்... நான்... நாங்கள்... நானும் என் நண்பனும் வேட்டைக்காகக் காட்டுக்கு வந்தோம். வழி தவறிவிட்டது.
காட்டுவாசிகள் எங்களைத் தாக்கினார்கள். என் நண்பன் பாவா கொல்லப்பட்டான். சாகுமுன் அவன்...
முகமூடி வீரர் - மாயாவியைப் பார்... அவர் உனக்கு உதவி செய்வார் என்றான்!
உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?
இந்தக் காட்டுக்கு வெளியே போக வேண்டும்... முதலில் சாப்பிட ஏதாவது... பசி காதை அடைக்கிறது.

முதலில் இவருக்கு ஓய்வு வேண்டும்.
நான் சொன்னதை யெல்லாம் மாயாவி நம்பிவிட்டான். இந்தக் குகைக்குள்தான் புதையல் இருக்கிறது? அத்தனையும் எனக்கே!
சாப்பிட்டுவிட்டு தூங்கு! நாளைக் காலை புத்துணர்ச்சியுடன் எழுந்திருப்பாய்.
தூங்குவதா? இன்று இரவே உன் புதையல் காலி!
இன்று நள்ளிரவு விஷ வாயு குப்பிகளைத் திறந்துவிடுவார்கள்!

மாயாவி செத்துப் போவாரா? கூடாது! ஆனால், நான் என்ன செய்ய முடியும்?
குரான்! இவன் சொன்ன கதையை நம்புகிறாயா?
மாயாவி பெரிய வீரனாமே... ஒரு வெடிகுண்டு அவனை காலி பண்ணிவிடும்!
நள்ளிரவு எல்லாரும் அயர்ந்து தூங்கும் நேரம். புதையலைக் கண்ணால் பார்க்கலாமா?

வெளிச்சம்! உள்ளே யாரும் இருக்கிறார் களோ?
நாம் கிளம்ப இன்னும் ஒரு மணி நேரந்தான் இருக்கிறது. முகமூடிகளை சோதித்துக் கொள்ளுங்கள். விஷப் புகை நம்மையும் தாக்கி விடக் கூடாது!
இந்நேரம் அந்தப் பகுதி முழுவதும் விஷப் புகை பரவியிருக்கும்!
அங்கேயே இந்த மூன்று முட்டாள்களையும் தீர்த்துக்கட்டிவிட வேண்டும். புதையல் முழுக்க எனக்கே!

மண்டை ஓட்டு மாளிகைக்குள் ஜேம்ஸ்...
மாளிகைக்குள் புதையல் இருப்பதாகப் பாவா சொன்னானே! இன்னும் உள்ளே போக வேண்டுமோ?
உள்ளே நடந்தான்.
புத்தகங்கள்! நிச்சயமாய் இது அற்புதப் புதையல் அல்ல!!
இது கல்லறை போல இருக்கிறதே! இடம் இல்லாமல் ஒன்றுமேல் ஒன்றாகக் கட்டப் பட்டிருக்கிறதா?
1621 1662
1550 1598
1781
1709
1880
மாயாவியின் முன்னோர்கள்.
முகமூடி வீரர் மாயாவி அணியும் உடைகள்! அவனுக்கு எதற்கு இத்தனை உடைகள்?
இதுதான் கடைசி அறை. இதற்குள்தான் அதிசயப் புதையல் இருக்கக்கூடும்!

உம்... ஆ... கதவு அசையக்கூட மாட்டேன்கிறதே...
என்ன தேடுகிறாய்?
!!
கதவுக்கு அப்பால் திடீரென்று மாயாவி தோன்றினார்.
பீட்டர்! புதையலின் மதிப்பு எவ்வளவு சொன்னாய்?
நூறு கோடி! என் பங்குப் பணத்தில் பாரிஸ் நகரையே விலைக்கு வாங்கப் போகிறேன்!
என் பங்குக்கு நாட்டையே விலைக்கு வாங்குவேன்! நான் சர்வாதிகாரி ஆவேன்!!
நல்ல யோசனை, கேப்டன்!
என் திட்டம் இவனுக்குத் தெரியாதே! எல்லாமே எனக்குத் தானே!!

மண்டை ஓட்டு மாளிகையில்...
நான்... எதுக்கு... இங்கே... ஆ... பசி... பசி... சாப்பிட ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தேன்!
ஓ! அப்படியா? சாப்பிடக் கத்தி கொண்டு வந்திருக்கிறாய்!
மூன் இல்லையா? என்னோடு வா!
எங்கே அழைத்துப் போகிறான்?
இங்கே ஒரு சின்னக் கருவூலம் இருக்கிறது.
எல்லாம் எனக்குத் தேவையில்லாதது.
இது பெரிய கருவூலம். விலை மதிப்பற்ற செல்வம் இங்கே இருக்கிறது. இதைப் பார், இதுதான் ஆர்தர் மன்னனின் வாள்!
நான் தேடிவந்த புதையல் இதுதானோ?
இது சாதாரண வாள் அல்ல. இந்த வாளைக் கொண்டுதான் தான் மன்னன் என்பதை ஆர்தர் நிரூபித்தார்.
இது என்ன பார்த்தாயா? இதற்குள் ஓர் உடல் பாடம் பண்ணி வைக்கப் பட்டிருக்கிறது.

பார், உலக அழகி
கிளியோபாட்ராவைக்
கடித்துக் கொன்ற
பாம்பு, இது.
இங்கே பார், எங்கும்
காணமுடியாத ஒன்று
இவ்வளவுதானா?
புதையல் எங்கே?
அடுத்த நிமிடம்
நாம் கிளம்ப
வேண்டும்.
அருவிக்கரையில்
இறங்க வேண்டும்.
நீ தெரியும். முகமூடியை
அணிந்துகொண்டு, ஜேம்ஸ்
இருக்கும் இடத்துக்கு
ஓடவேண்டும்.

கேப்டன் இப்பொழுது வந்துவிடுவார். ஜேம்ஸ்சை இன்னும் காணோமே?
இந்த இலை முடி சீசருக்கு அந்தோணி கொடுத்தது.
"சீசர் முடி வேண்டாம் என்று மும்முறை மறுத்தான்".
கல்லில் செய்யப்பட்ட கிண்ணம். இது அலெக்சாண்டர் பயன்படுத்தியது!
இது கொம்பு. ரோலண்டு மன்னன் பயன்படுத்தியது.

"போரை நிறுத்துங்கள்! நாம் வெற்றி பெற்று விட்டோம்!
இதுதான் புதையலா? எல்லாம் பழைய குப்பைகள்!
ஜேம்ஸ் எந்த நேரமும் திரும்பி வரக்கூடும். நான் விஷவாயுக் குண்டுகளைத் தயாராக எடுத்து வைப்பது நல்லது.
அருவி ஓசை கேட்கிறது!
ஜேம்ஸ் ஏன் இன்னும் வரவில்லை? ஹெலிகாப்டர் வேறு இப்போது வந்துவிடும்!

ஜேம்ஸ் வராவிட்டால்,
நானே விஷ வாயுக் குண்டுகளை
வீசவேண்டியதுதான். நீயையும்
மூட்ட வேண்டும்.
POISO
GAS
நாம்
இறங்க வேண்டிய
இடத்தை நெருங்கி
விட்டோம்!
இன்னும் நிறையப்
புதையல் இருக்கிறது.
பார்க்கிறாயா?
இதைத்தான்
புதையல்
என்கிறானா?
வேண்டாம்!
மிகவும் நன்றி.
எனது சிறிய
கருவூலத்தைப்
பார்க்கிறாயா?
வேண்டாம்!
வேண்டாம்!!

குகைக்கு வெளியே வந்தார்கள்.
உன் அன்புக்கு நன்றி. இவ்வளவு நேரம் குகைக்குள் இருந்தது எனக்குத் தலையை வலிக்கிறது. அப்படியே காற்றாட நடந்துவிட்டு வருகிறேன்.
பெரிய புதையல் என்று நினைத்து ஏமாந்துவிட்டோம்! அந்த பாவா... ராஸ்கல்...
ஹெலிகாப்டர் இப்பொழுது வந்துவிடுமே! சே! புதையல் புத்தகமாம்... ஒரே பித்தலாட்டம்!
ஜேம்ஸ்! ஓடி வா! ஹெலிகாப்டர் வந்து கொண்டிருக்கிறது!!
முட்டாளே! இங்கே புதையலே இல்லை! எல்லாரும் வெறுங் கையுடன் திரும்ப வேண்டியதுதான்.
!

வரவேண்டிய இடத்துக்கு வந்துவிட்டோம், கேப்டன். நீ தெரிகிற வரை வட்டமடிக்க வேண்டும்!
முகமூடியை அணிந்து கொண்டு, இறங்கத் தயார் ஆகுங்கள்!
காட்டுக்குள்-
புதையல் இல்லையா? எல்லாவற்றையும் நீயே எடுத்துக்கொள்ளப் பார்க்கிறாயா?
புதையலை நான் பார்த்தேன். துருப்பிடித்த வாள்... செத்த பாம்பு... போர்க்களத்தில் ஊதும் ஒரு கொம்பு... எல்லாம் பத்துக் காசு பெறாது!

பொய் சொல்லாதே. ஜேம்ஸ்! என் மாமா பார்த்திருக்கிறாரே... எல்லாம் பொன்னும் மணியும்.. பகல் கனவு!
நேரமாகிவிட்டது, கேப்டன். நெருப்பு எங்கே?
கொஞ்சம் பொறுப்போம். இல்லாவிட்டால், நாமே இறங்கிவிட தான்.
அதோ ஹெலி காப்டர்! விஷ குண்டுகளை வீசு! நெருப்பு மூட்டு!
முட்டாளே! துருப்பிடித்த வாளுக்கு நாம் சாகவா?
சும்மா சும்மா பொய் சொல்லாதே! நீ அந்தப் புதையலை எடுத்துக் கொள்ள முடியாது. அதற்கு முன் உன்னை சுட்டுக் கொல்லுவேன்!
வேண்டாம், பாவா!

!?
டமீல்...!
விஷ குண்டுகள்! எங்கள் எல்லாரையும் கொன்றுவிட்டு, புதையலை கொள்ளையடிப்பது தான் உங்கள் திட்டமா?
!!
ஜேம்சை நோட்டமிட மாயாவி பின்தொடர்ந்து வந்தார்.
ஹெலிகாப்டர் வேறு வருகிறதா? அதிலேதான் புதையலை அள்ளிக் கொண்டு போகப் போகிறீர்களா?
அய்யே! புதையலா?
நெருப்பைக் காணோமே? நாம் இறங்க வேண்டியது தான்!
ஜேம்ஸ்! நீ சிறையில் இருந்து தப்பியவன்தானே? நீ ஒரு கடத்தல் குற்றவாளி என்பது எனக்குத் தெரியும்!

பாவா! நீயுமா இவனுடன்? இவர்களுடன் சேர்ந்து கொண்டு உன் இனத்தையே நீ அழிக்கப் போகிறாயா? உன் இனத்துக்கு நீ செய்யும் நன்றி இதுதானா?
அவன் துப்பாக்கியைத் தட்ட வேண்டுமே!
மாயாவி! என் இனம் எனக்கு என்ன செய்தது? என்னைத் திருடன் ஆக்கி சிறைக்கு அனுப்பியது!
!
முட்டாளே! மாயாவி யார் தெரியுமா? மின்னல் போலப் பாயக்கூடியவர்! ஒரு நொடியில் நீ பிணம் ஆகிவிடுவாய்!
கத்தியைக் கீழே போடு!
ஆ!
எங்களிடம் ஆயுதம் எதுவும் இல்லை!
இப்பொழுது எங்களுடன் மோதத் தயாரா?

நீ உண்மையான மாயாவி என்றால், என் அறைகூவலை ஏற்றுக்கொள்வாய்!
ஆனால், நீங்கள் கொள்ளைக் காரர்கள்! ஆனாலும், உங்களுடன் ஆயுதமின்றி மோத நான் தயார்!
நான் ஒருவன். நீங்கள் இருவர். வாருங்கள்!
பாவா! விடாதே! தீர்த்துக்கட்டி விடலாம்!
கேப்டன்! நெருப்புத் தெரியும்வரை நாம் காத்திருப்பதுதான் நல்லது.
சரி, இன்னும் கொஞ்சநேரம் பொறுப்போம்.

இருவரும் ஒண்ணா வாருங்கள்!
நான் ஒருவன் போதும்.
ஜேம்ஸ்! அந்தத் துப்பாக்கியை எடு!
பலே பாவா!
அப்...பா...
ஆ...!

ஆ!
நாம் நழுவி விடலாமா?
இது அடியா... இடியா...
இது என்ன கையா? இரும்புத் தடியா!
உங்களுடைய நெருப்புக்காக அது காத்திருக் கிறது!
அதோ கெலி காப்டர்!
மாயாவி ஒரு தீப்பந்தத்தைக் காட்டினார்!

பிறகு விழுந்து கிடந்த இருவரையும் தூக்கிக்கொண்டு போனார்!
அவர்கள் இறங்கட்டும்! செமத்தையா வரவேற்பு கிடைக்கும்!!
அதோ நெருப்பு தெரிகிறது!
முகமூடியை அணியுங்கள்! கீழே இறங்குங்கள்!
ஜெம்ஸ் கில்லாடிதான்! மண்டை ஓட்டு மாளிகை முன்பே நாம் இறங்க ஏற்பாடு செய்துவிட்டானே!
காட்டுவாசிகள் எல்லாரையும் விஷ வாயு இந்நேரம் கொன்று இருக்கும் அல்லவா!

யாரையும் காணோமே... எல்லாரும் செத்திருப்பார்கள்... அதோ ஒரு நாய்...
நாய் மட்டும் ஏன் சாக வில்லை?
அதோ ஜேம்ஸ்... பாவா...
ஜேம்ஸ்...
முகமூடியைக் கழற்றுங்கள். விஷ வாயு இல்லை.
பின்னே திரும்பிப் பாருங் கள்.
ஆ...!
அச்சோ!
உங்களைச் சுற்றி ஆயிரம் பேர் அம்புகளுடன் நிற்கிறார்கள். விஷம் தடவிய அம்பு. ஒரு அம்பு பாய்ந்தால் போதும். அரை நிமிடத்தில் ஆள் காலி...

என் கையில் பார்த்தாயா? துப்பாக்கி! குண்டு பாய்ந்ததுமே ஆள் காலி!
விளையாடாதே, கேப்டன்! ஆயிரம் அம்பு, அத்தனையும் விஷம் தடவியது!!
கேப்டன்! மாயாவி சொல்லுகிறதை செய்யுங்கள்!
இல்லாவிட்டால் நாம் எல்லாருமே கூண்டோடு கைலாசம்தான்.
புதையலை எடுக்காமல் நான் போகமாட்டேன்! சுட்டுத்தள்ளுங்கள்!!
எல்லாரும் துப்பாக்கிகளைக் கீழே போடுங்கள்!
!
டுமீல்..
டுமீல்...

முட்டாள்தனே!
என்ன செய்தீர்கள்?
விஷ குண்டுகள்
எங்கே?
பொறுங்கள் கேப்டன்.
புதையலைப் பார்த்தேன்.
பத்துக்காசுபெறாத பழைய
சாமான்கள்!
பொய்
சொல்லுகிறான்!
ரொம்பக் கஷ்டப்பட்டு இங்கே
வந்திருக்கிறீர்கள். குகைக்குள் போய்ப்
புதையலைப்
நான் ஏற்கனவே
பார்த்துவிட்டேன்!
ஆர்தர்
மன்னரின்
வாள், இது.
இது துருப்
பிடித்த
குப்பை
யாம்!
இது சீசரின் முடி....
இது அலெக்சாண்டரின்
கிண்ணம்... எல்லாம்
அசல், கேப்டன்.
இது குப்பையா?
அறிவுகெட்ட
பயலே!
விலை
மதிப்பில்லா
கருவூலம்!

எனக்கு என்ன தெரியும்? பழைய குப்பை போலத் தெரிந்தது!,
இவை புராதனமானவை. கோடி கோடி பெறும்!
இங்கே சண்டை வேண்டாம்!
வாருங்கள்! வேறு சில பொருட்களைக் காட்டுகிறேன்!
இதுதான் எனது சிறிய கருவூல அறை. ஜேம்ஸ் பார்க்கவில்லை.
புதையல் இதுதானா? அத்தனையும் தங்கம்... வயிரம்...

அலிபாபா குகை போல இருக்கிறதே!
இவர்கள் மூவரும் சிறையில் இருந்து தப்பிய கைதிகள். பத்திரிகையில் நான் பார்த்தேன்!
!!
நீங்கள் எல்லாரும் மீண்டும் சிறைக்குப் போக வேண்டியவர்களே! நடங்கள்! நடந்தே போங்கள்!!
ஆப்பிரிக்கன் டைம்ஸ்
சிறையில் இருந்து தப்பிய
மூவர் மீண்டும் பிடிபட்டனர்!
உங்களாலே நானும் மாட்டிக் கொண்டேன்!
திருடனுடன் சேர்ந்தவனும் திருடன்தானே!
பேராசைப் பேய் மனிதனை எங்கெங்கோ அழைத்துப் போகிறது. சிறைச் சாலைக்குக் கூட!
(முடிந்தது)

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

அடுத்த
காமிக்ஸ்

துப்பாக்கிப் பெண்

செப்டம்பர் 1ந் தேதி வெளிவருகிறது.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007